# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை 03.12.2024 கதிர் 69



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# தேர்தல் வரவு, செலவீன விபரங்களை டிச. 06க்கு முன் கையளிக்கப் பணிப்பு

கொழும்பு, டிச. 03

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் எதிர்வரும் 6ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் தமது தேர்தல் செலவீனங்கள் குறித்த வருமான செலவு அறிக்கைகளைச் சமர்பிக்கத் தவறினால் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயாதீன குழுக்களின் தலைவர்கள் தமது வருமான செலவு அறிக்கைகளைத் தனித்தனியாக தயாரித்து எதிர்வரும் 6ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் கையளிக்க வேண்டுமென தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு வேட்பாளரும் தாம் போட்டியிட்ட மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும், தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல்கள் செயலகத்துக்கும் செலவு அறிக்கையைக் கையளிக்க வேண்டும்

2➤

# உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக் கோரப்படும்!

## - அமைச்சரவையில் தீர்மானம் -



**அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு இடமளிக்கும் வகையில் உள்ளூராட்சி சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கும், 2023 ஆம் ஆண்டு நடைபெற விருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இன்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.**

2➤

## ரூ. 6,000 கற்றல் உபகரணக் கொடுப்பனவு!

கொழும்பு, டிசெ 03

விசேட தேவையுடைய மாணவர்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் தங்கிக் கல்விகற்கும் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் உபகரணக் கொள்வனவுக்காக ரூபா ஆறாயிரம் உதவித் தொகை வழங்க அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

இந்த திட்டத்தை அடுத்த தவணையிலிருந்து அமுல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும், பிரதமரால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பிரேரணைக்கு நேற்று அமைச்சரவை அனுமதி

2➤

## லிற்றோ காஸ் விலையில் மாற்றமில்லை



கொழும்பு, டிசெ. 03

டிசெம்பர் மாத விலை மீளாய்வுக்கமைய லிற்றோ எரிவாயு விலையில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று லிற்றோ காஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

2➤

# டி.ஐ.ஜி கள் உட்படப் பலருக்கு திடீர் மாற்றம் சி.ஐ.டி யின் பணிப்பாளராக பெண் அதிகாரி!

யாழ்ப்பாணம், டிசெ. 03

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகப் பெண் பொலீஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் எஸ்.டபிள்யூ.ஐ.எஸ். முத்துமாலாவே குற்றப்புலனாய்வுத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினால் 54 பொலீஸ் அதிகாரிகளை இடமாற்றுவதற்கான சிபாரிசு கடந்த மாதம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, முதற்கட்டமாக பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் உட்பட 41 பொலீஸ் உயரதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்

2➤

## 60 வயது மூதாட்டிக்கும் விசாரணை!

மூதூர். டிசெ. 03

திருகோணமலை மூதூர் - தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 60 வயதான சமூக செயற்பாட்டாளர் நவரத்தினராசா அஞ்சலிதேவி என்பவரை விசாரணை செய்வதற்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு மற்றும்

2➤

## சுண்டிக்குளம் கடற்பரப்பில் இந்தியர்கள் 23 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 03

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்து, அனுமதியின்றிக் கடற்றொழிலில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மீன்பிடி படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

கைதான இந்திய மீனவர்களும், அவர்களிடமிருந்து கைய கப்படுத்தப்பட்ட மீன்பிடிப் படகும் காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டு, மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகர் காரியாலயத்தில் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ-03)

## இந்திய மீனவர்கள் 23 பேர் நிபந்தனையுடன் விடுதலை!

யாழ்ப்பாணம், டிசெ. 03

விளக்கறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தினால் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்த 10 ஆம் திகதி இலங்கையின் நியாயாதிக்க எல்லையான நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இன்று காலை இந்த 23 பேரும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதவான் என். சுபாஸ்கரன் இவர்கள்

2➤

# எதிர்க் கட்சி பிரதம கொறடாவாக கயந்த கருணாதிலக்க நியமனம்!

கொழும்பு, டிச. 03
10ஆவது நாடாளுமன்றத்தில் எதிர்க்



கட்சியின் பிரதம கொறடாவாக நாடாளு மன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல இன்று சபையில் அறிவித்தார்.

மேலும்,நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 143 இன் பிரகாரம் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட் டத்தொடரின் போது சேவையாற்றுவ தற்கான தவிசாளர் குழாத்திற்கு உள் ளடக்குவதற்கு லக்ஸ்மன் நிபுண ஆரச்சி, இம்ரான் மகரூப், ரோஹினீ குமாரி விஜேரத்ன, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, சிரேஷ்ட பேராசிரியர் சேன நாணாயக்கார, சானக மாதுகொட, சுஜீவ ரணசிங்ஹ, அரவிந்த செனரத், கிட்ணன் செல்வராஜ் ஆகியோர் தன்னால் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

# அழகுசாதனப் பொருட்களைக் கடத்திய வியாபாரி விமான நிலையத்தில் கைது!



கொழும்பு, டிசெ.03
இந்தியாவின் மும்பாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக அழகு சாதனப் பொருட்க ளைக் கடத்த முற்பட்ட 34 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இன்று காலை, அனும திக்கப்பட்ட அளவுக்கு அதிகமான அழகு சாதனப் பொருட்களைத் தனது பயணப் பொதியில் வைத்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற போது சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் மட்டக்களப் பைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் என்றும், இவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக அடிக்கடி பயணிக்கும் ஒருவர் என்றும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-07)

## தேர்தல் வரவு, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருமான செலவு அறிக்கைகளைப் பொறுப்பேற்பதற்காக அனைத்து மாவட் டங்களிலும் விசேட கருமபீடம், வார நாட்களில் மாலை 6 மணி வரையிலும் எதிர்வரும் 6 ஆம் திகதி இரவு 12 மணி வரையிலும் திறக்கப்பட்டிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய தினத்துக்கு முன்னதாக செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை தொடர் பில் தேர்தல் செலவினங்கள் ஒழுங்கு படுத்தல் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (இ)

## உள்ளூராட்சி சபைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
2023 ஆம் ஆண்டு நடைபெறவி ருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக் கான வேட்புமனுக்களைச் சமர்ப்பித்த சிலர் தற்போது உயிருடன் இல்லாத காரணத்தாலும், வேறு சிலர் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதுடன், சிலர் கட்சி மாறியுள்ளதாலும் இம்முறை நடை பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்த லுக்குப் புதிதாக வேட்புமனுக்களை கோரும் யோசனை முன்வைக்கப்பட்டது என அமைச்சர் ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேநேரம், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அண்மையில் நடை பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக வும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ரூ. 6,000 கற்றல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிடைத்ததாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேநேரம், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்காவின் நாடாளுமன்றக் கொள்கைப் பிரகடன உரையின் படி, நாட்டிலுள்ள அத்தனை பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணக் கொள்வனவுக்காக உதவு தொகை வழங்கப்படவுள்ளதாகவும். 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத் தில் அது உள்ளடக்கடும் என எதிர்பார்க் கப்படுவதாகவும் அரச தரப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது

## லிற்றோ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசாங்கத்தின் விலைச் சூத்திரத்துக் கமைய எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகி யன மாதாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு புதிய விலை அறிவிக்கப்படுவது வழமை யாகும். எனினும் கடந்த மூன்று மாதங் களாக லிற்றோ எரிவாயு விலையில் எந்த விதமான மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## 60 வயது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசாரணைப் பிரிவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பழைய பொலிஸ் நிலைய பகுதியில் அமைந்துள்ள பயங்க ரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரி வுக்கு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வருமாறு எழுத்து மூலமாக அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-75)

## டி.ஐ.ஜி கள் உட்படப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈ.எம்.எம்.எஸ். தெஹிதெனிய நுகேகொட பொலீஸ் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேநேரம், கந்தல பொலீஸ் பிரிவில் பணியாற்றிய சிரேஷ்ட பொலீஸ் அத்தி யட்சகர் கே.பி. மனதுங்க பொலீஸ் ஊட கப் பிரிவின் பணிப்பாளராகவும், பொலீஸ் ஊடகப் பேச்சாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளார். இதுவரை காலமும் பொலீஸ் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றி வந்த பிரதிப் பொலீஸ்மா அதிபரும், சட் டத்தரணியுமான நிஹால் தல்துவ குற்றத் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலீஸ்மா அதிபராகத் தொடர்ந்தும் கடமையாற்ற வுள்ளார்.

இது தவிர பல்வேறுபட்ட அளவில் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் உட்பட பொலீஸ் அதிகாரிகள் பலர் உடனடியா கச் செயற்படும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலீஸ் ஊட கப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடகக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-09)

## இந்திய மீனவர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைவருக்கும் 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். இவர்களில் மூன்று படகோட்டிகளுக்கு 04 மில்லியன் ரூபா அபராதமும், 06 மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட் டதோடு, அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் மேலதிக 06 மாத சிறைத் தண்டணையை அனுபவிக்க வேண் டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-77)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்



# நாடாளுமன்றத்தில் தான் தாக்கப்பட்டதாக எம். பி இராமநாதன் அர்ச்சுனா முறைப்பாடு

கொழும்பு, டிச. 03

நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தன்னைத் தாக்கியதாக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனக்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் அறிந்து கொள்வதற்காக நாடாளுமன்றில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு சென்றிருந்த போது தன்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்துக்கு முன்பாக முறையற்ற விதத்தில் செயற்பட்டதாகவும் முறையற்ற வசனங்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் குற்றஞ் சாட்டினார்.

அத்துடன் இந்த விடயம் குறித்து சபாநாயகரிடம் முறைப்பாடளிக்கப் பட்டுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

இதேவேளை, அவரை தொடர்ந்து



எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை முழுமையாக நிராகரிப்பதாகவும் அவர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். (ஐ)



# அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, டிசெ. 03

நாட்டில் தற்போது நிலவும் அரிசி பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில், அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாரந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தின் படி, அனுமதிப் பத்திரம் இன்றி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை சுயாதீனமான அரிசி இறக்குமதி செய்வதற்குக்கு அனுமதி வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் நெற்பயிர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், நாடு உள்ளிட்ட அரிசி வகைகளுக்கான தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும், அரிசியின் சில்லறை விலையில் மாற்றம் ஏற்படாது என்றும், நாட்டில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும் என்றும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ஐ-12)

# அரசாங்கத்தின் நட்ட ஈடு போதாது கமநல அமைப்புக்கள் தெரிவிப்பு!



(இறக்காமம் எஸ்.எல்.நிசார்)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஏராளமான விவசாய நிலங்களும் ,பயிற்சி செய்கைகளும் பாதிப்புற்றுள்ளதனால் அவற்றுக்காக அரசாங்கம் அறிவித்துள்ள இழப்பீட்டுத் தொகை போதாமை குறித்து கமநல அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு, கிழக்கு ,மத்திய மாகாணங்களில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்த நெற்பயிர்ச் செய்கை , பெரிய வெங்காயம் மற்றும் சோயா, உருளைக்கிழங்கு, மிளகாய், சோளம் உள்ளிட்ட பயிர்கள் பாதிப்படைந்துள்ள நிலையில் அவற்றுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் விவசாயத் துறைபிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன நாட்டில் ஏற்பட்டுள்ள விவசாய பாதிப்புகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 40 ஆயிரத்துக்கு மேற்படாத தொகை இழப்பீடாக வழங்கப்படும் என அறிவித்ததையடுத்தே கமநலஅமைப்புகள் குறித்த இடப்பீட்டுத் தொகையானது போதுமானதாக இல்லை என்றும் அரசாங்கம் உரிய முறையில் கள மதிப்பீடுகளை செய்து இழப்பீட்டுத் தொகையினை வழங்க முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பயணப் பொதியை களவாடிய பெண் சீ.சீ.ரி.வி காணொலியில் சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 03

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வர்த்தகர் ஒருவரின் 13 இலட்சம் ரூபா பெறுமதியான பயணப்பொதியை திருடிய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் விமான நிலைய பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெம்மாதகம - பெதிகம்மன பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய பெண் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவார்.

தெஹிவளை – களுபோவில பகுதியைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரின் பயணப் பொதி கடந்த மாதம் 28 ஆம் திகதி விமான நிலையத்தில் காணாமல் போயுள்ளது.

அந்தப் பயணப்பொதியில் மாணிக்கக்கல் தொடர்பான ஆவணங்கள், மாணிக்கக்கல் பொதி செய்வதற்கான பெட்டிகள் மற்றும் பெறுமதியான பல பொருட்கள் இருந்ததாக விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, விமான நிலைய கண்காணிப்புக் கமரா காணொலியைப் பரீட்சித்த பின்னர், சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண்ணின் வீட்டிலிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம்ரூபா பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், வர்த்தகரிடம் இருந்து திருடப்பட்ட பயணப்பொதி சந்தேக நபரால் எரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-05)

# வடதாரகைக்குக் காத்திருந்தோர் குமுதினியில் போய்ச் சேர்ந்தனர்!




நெடுந்தீவு, டிசெ. 03

நெடுந்தீவுக்கு வடதாரகையில் செல்வதற்காக நேற்று மாலை முதல் காத்திருந்த பயணிகள் அனைவரும், குமுதினியின் உதவியுடன் நேற்றிரவு நெடுந்தீவைச் சென்றடைந்தனர்.

வழமையான படகு ஒழுங்கின் படி நேற்று மாலை 04.00 மணிக்கு வடதாரகை படகு குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குப் புறப்படவிருந்த நேரத்தில் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதனால், நேற்று மாலை, நெடுந்தீவுக்கான மாலை நேரப் பயணத்துக்காக வந்த சுமார் 60 பயணிகள் குறிகட்டுவான் கரையில் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. துறைமுகப் பகுதியில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், நோயாளர்கள் உட்படப் பலர் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

பழுதடைந்த படகில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின் பயணம் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டதனால் மாற்றுப் படகு எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை. முன்னிரவு வரை திருத்த வேலைகள் பலனளிக்காத காரணத்தினால், நெடுந்தீவில் இருந்து குமுதினிப் படகு வரவழைக்கப்பட்டு பயணிகள் அனைவரும் பாதுகாப்பாகப் பயணிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

குமுதினிப் படகில் பயணம் மேற்கொண்ட பயணிகள் இரவு 08.30 மணியளவில் நெடுந்தீவைச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



கிழக்கு மகாணம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தின் பின்னர் நுளம்புகள் பெருகாத வண்ணம் புகை விசிறல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடவடிக்கையில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் ஈடுபட்டனர்.

**(படங்கள் : மாளிகைக்காடு செய்தியாளர்)**

# அரச திணைக்களங்களில் உள்ள அதி சொகுசு வாகனங்கள் நீக்கம்



அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் அதிகளவான செலவுகளைக் கொண்டுள்ள அதிசொகுசு வாகனங்களை முறைசார்ந்த வகையில் பாவனையிலிருந்து அகற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் ஒரு சில அதிசொகுசு வாகனங்களின் பராமரிப்பு மற்றும் எரிபொருளுக்குச் செலவாகும் அதிகளவான தொகையைக் கருத்தில் கொண்டு, அவ்வாறான அதிசொகுசு வாகனங்களைப் பாவனையிலிருந்து அகற்றுதல் பொருளாதார ரீதியாக மிகவும் பயனுள்ளதாக அமையுமெனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொண்டு, 2025.03.01 திகதிக்கு முன்னர் அந்தந்த பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மூலம் அதிசொகுசு அரச வாகனங்களைப் பாவனையிலிருந்து அகற்றுவதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கிணற்றில் விழுந்து இளைஞன் மரணம்

கிணற்றில் தவறி வீழ்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞன் ஆவார்.

உயிரிழந்த இளைஞன் தனது தாயுடன் வசித்து வந்துள்ள நிலையில் உயிரிழந்துள்ளார். சம்பவ தினத்தன்று தாய் வீட்டில் இருந்து வெளியே சென்று மீண்டும் வீடு திரும்பிய போது இளைஞன் வீட்டுக்கு அருகில் உள்ள 15 அடி ஆழமுடைய கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்திருப்பதை கண்டுள்ளார்.

சம்பவம்தொடர்பில்தாயார்பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# உயர்தரப் பரீட்சை மீண்டும் நாளை ஆரம்பம்!




கொழும்பு, டிசெ 03

சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நாளை முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகிய நிலையில், கனமழை காரணமாக 27ஆம் திகதி முதல் பரீட்சைகள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இடைநிறுத்தப்பட்டிருந்த பரீட்சைகள் நாளை முதல் வழமையான நேரசூசியின் படி நடைபெறும் எனவும், இடைநிறுத்தப்பட்ட நாள்களுக்குரிய பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (ஐ-04)



# சீனாவில் புதிய தங்கச் சுரங்கம்

தங்கத்தின் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருக்கும் சூழலில் சீனாக்கு மிகப்பெரிய லாட்டரி அடித்துள்ளது. உலகளவில் மிகப்பெரிய பொருளாதார சக்தியாக சீனா மாறிவருகிறது. சீனா சமீபகாலமாக தனது எதிர்காலத்திற்கான வளங்களைப் பாதுகாப்பதில் தொடர்ந்து முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இந்த தொடர்ச்சியான முன்னேற்றத்தில் ஹுனான் மாகாணத்தில் ஒரு பெரிய தங்க கண்டுபிடிப்பு என்பது மிகவும் குறிப்பிடத்தக்க சமீபத்திய முன்னேற்றங்களில் ஒன்றாகும். இந்த கண்டுபிடிப்பு சீனாவின் பொருளாதாரத்தை உயர்த்துவது மட்டுமல்லாமல், உலகப் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் சீனாவை பாதிக்காமல் பாதுகாக்கும்.

### ஹுனானில் ஒரு பெரிய தங்கச்சுரங்கம் கண்டுபிடிப்பு

ஹுனான் மாகாணத்தில் அமைந்துள்ள பிங்ஜியாங் கவுண்டியில், வாங்கு சுரங்கத்தில் மிகப்பெரிய தங்கச் சுரங்கத்தை சீனா கண்டுபிடித்துள்ளது. இந்த கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, கிடைத்துள்ள தங்கத்தின் அளவு மிகப்பெரியது என்பதால் இது தலைப்புச் செய்திகளை உருவாக்கியுள்ளது. இந்த சுரங்கத்தில் 1,000 டன் தங்கம் மறைந்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. சவுத் சைனா மார்னிங் போஸ்ட் படி, இந்த தங்கத்தின் மொத்த மதிப்பு சுமார் 600 பில்லியன் யுவான், இந்திய மதிப்பில் சுமார் 7 லட்சம் கோடி ரூபாயாகும்.

ஊடக அறிக்கைகளின் படி, இந்த தங்கம் மிகவும் ஆழமாக, நிலத்தடியில் அமைந்துள்ளது, ஆனால் இந்த சுரங்கம் சீனாவின் மிக முக்கியமான தங்க ஆதாரங்களில் ஒன்றாக மாறுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் கொண்டுள்ளது. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது நாட்டிற்கு முன்னுரிமையாக இருக்கும் நேரத்தில் சீனாவுக்கு இந்த புதிய சொத்து கிடைத்திருப்பது சீனா பொருளாதாரத்தில் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகிறது.

### சீனாவுக்கு தங்கம் ஏன் முக்கியமானது?

சீனாவிற்கு தங்கம் ஒரு முக்கிய சொத்தாக மாறியுள்ளது, குறிப்பாக கடினமான பொருளாதார காலங்களில் நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் தங்கம் முக்கியப்பங்கு வகிக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, சீனாவின் பொருளாதாரம் நாணயத்தின் மதிப்பு குறைவு மற்றும் உலகளாவிய குறிப்பிடத்தக்க வர்த்தக பதட்டங்கள் உட்பட சவால்களை எதிர்கொண்டது. இதுபோன்ற காலங்களில் தங்கம் பாதுகாப்பான முதலீடாக கருதப்படுகிறது, அதனால்தான் சீனா தனது தங்க இருப்பை அதிகரிக்க முயற்சி செய்து வந்தது.

இந்த சூழ்நிலையில் ஹுனானில் இந்த கண்டுபிடிப்பு உண்மையில் சீனாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும். சமீப காலமாக சீனாவின் அரசாங்கம் கனிம ஆய்வில் தனது முதலீட்டை அதிகரித்து வருகிறது, தங்கம், எண்ணெய் மற்றும் அரிய பூமி கூறுகள் போன்ற வளங்களைப் பாதுகாக்க பில்லியன் கணக்கான யுவான்களை செலவழித்து வருகிறது. 2022 ஆம் ஆண்டில், சீனா 110.5 பில்லியன் யுவானை கனிமங்களைக் கண்டறிய முதலீடு செய்தது, இது வெளிநாட்டு வளங்களை நாடு சார்ந்திருப்பதைக் குறைக்க உதவுகிறது.



சீனா பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இந்த தங்கச் சுரங்கள் விலைவாசி உயர்வு அல்லது யுவானின் மதிப்பு வீழ்ச்சியிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாக்க அரசாங்கத்திற்கு உதவும். பொருளாதாரம் ஊசலாடும் போது தங்கம் பொதுவாக பாதுகாப்பான தேர்வாகக் கருதப்படுகிறது, மேலும் தன்னுடைய தங்க இருப்பை அதிகரிப்பதன் மூலம், எதிர்காலத்தில் வரக்கூடிய எந்தவொரு பிரச்சினைக்கும் சீனா தயாராகி வருகிறது.

### தங்க சுரங்கம் எவ்வாறு உருவாகிறது?

புவியியலாளர்களின் கூற்றுப்படி, தாதுக்கள் நிறைந்த திரவங்கள் பூமியின் மேலோட்டத்தில் உள்ள விரிசல்கள் வழியாக நகர்ந்து, சுற்றியுள்ள பாறைகளில் இருந்து தங்கத்தை குவித்து, வெப்பநிலை அல்லது அழுத்தம் மாறும் போது தங்கத்தை விரிசல்களில் உருவாக்குகின்றன. இந்த புவியியல் செயல்முறைகள் நடைபெற மில்லியன் கணக்கான ஆண்டுகள் ஆகும், அதனால்தான் தங்கம் உருவாவது அரிதாகிறது.









இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.12.2024 இல் வெளியிடப்பெற்றது.